# அத்தியாயம் 11

# மாறிவரும் சூழலுக்கேற்ப இலங்கையில் தம்மை மாற்றிக் கொள்ளும் பழங்குடிகள்

இலங்கையின் பழங்குடி மக்கள் பிரிவிற்குள் இன்றும் எங்களிடையே வாழும் மக்கள் பிரிவு வேடர்களாகும். வேடர்களில் இன்று எஞ்சியிருப்போர் மிகச் சிறிய அளவினரேயாகும். வேடரின் ஆரம்பம் சம்பந்தமாக பல்வேறு வகையான கருத்துக்கள் உள்ளன. கி.மு 1500ம் ஆண்டளவில் புரதான இலங்கையில் வசித்த பலாங்கொடை மனிதனுக்கு வேடர்களோடு தொடர்பு உள்ளதாக 'கலாநிதி சிரான் தெரணியகல' என்பவர் கூறியுள்ளார். அதனடிப்படையில் எங்கள் வேடர்களுக்கு நீண்ட வரலாறு இருப்பதென்பது தெரிய வருகிறது. இன்று இலங்கையில் மூன்று வகையான வேடர்கள் வாழ்ந்து வருவதை அறியலாம். கல்வேடர், வேட்டை வேடர் அல்லது கிராமவேடர், கரையோர வேடர் ஆகியோராவர். கரையோர வேடர் கடல் வேடர் என்ற பெயரினாலும் அழைக்கப்படுகின்றார்.

## ஆதிவாசி மக்கள் பரந்திருந்த பிரதேசங்கள்

இலங்கையில் ஆதிவாசி மக்கள் பற்றிய ஆராய்ச்சிகளிலிருந்து பெறப்பட்ட அறிக்கையின் அடிப்படையில் தீவில் ஈர, உலர் வலயங்களில் எண்ணிக்கையற்ற பல ஆதிவாசிகளின் குடியிருப்புக்கள் இருந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.


| | | |
|---|---|---|
| ❑ வடமத்திய மாகாணம் - | அநுராதபுர மாவட்டம் - | தந்திரிமலை, வன்னி, ஹலம்பாவ கட்டுகலியாவா, கிரிமட்டியா |
| | பொலன்னறுவை மாவட்டம் - | ரொட்டகுளம், புஸ்திவுல் குளம் |
| ❑ ஊவா மாகாணம் - | பதுளை மாவட்டம் - | மகாஓயா,தம்பானா, பிங்கொட, மஹியங்கனை, வட்டவன, ஹொட்டபக்கினிய, சொரபொர, முல்லேகம, தானிஹல, ஹெனேபத்தை, ஹென்னானிகலை |
| ❑ கிழக்கு மாகாணம் - | - | மகாஓயா, நுவரகல, சீதலவன்னிய, எம்பிலின்ன, அத்பத்கலை, பொல்லேபத்த |

**செயற்பாடு 1**

- இலங்கையின் ஆதிவாசிகள் பரந்திருக்கும் பிரதேசங்களைக் காட்டும் தேசப்படம் ஒன்றைத் தயாரிக்குக.

## சுற்றாடலுக்கு இசைவாகுதல்

ஆதிவாசி மக்கள் காட்டுப் பிரதேசங்களிலேயே வாழ்ந்து வந்தனர். அதனால் அவர்கள் அச்சூழலுக்கு இசைந்ததாக வாழ்க்கையை அமைத்துக் கொண்டனர். ஆரம்பத்தில் அவர்களின் வீடுகள் கற்குகைகளாக இருந்தன. ஆடைகள், இடைப்பகுதியை மட்டும் சிறிதளவு மறைக்கக்கூடிய விதமாக மாத்திரம் இருந்தன. வேட்டையாடி உணவைத்தேடிக் கொள்ள பழக்கப்பட்டிருந்ததால் அம்பு, ஈட்டி, கோடரி, உளி (சட்டேரி) என்பவைகளை ஆயுதமாக பாவித்தனர். கோடரியை தோளில் சுமந்த வண்ணமிருக்கும் இவர்கள் மரப்பொந்துகளில் இருக்கும் தேனை உடைப்பதற்கு இதைப் பயன்படுத்தினார்கள். பெரிய அடர்த்தியாகவுள்ள மரப்பொந்துகளில் தேனை நிறைத்து, மிருகங்களின் இறைச்சியை களிமண் பாத்திரங்களால் மூடி அதில் ஊறவைத்து சிறிது காலத்தின் பின் உணவாகப் பயன்படுத்தப் பழகிக் கொண்டனர். எளிமையான வாழ்க்கையை மேற்கொண்டதுடன் சிறிதளவு பொருட்களை உபயோகப்படுத்தினர். காட்டுக்கு அன்பு செலுத்தியதுடன் மிருகங்கள், பறவைகளுக்கும் தேவையின்றி தீங்கு விளைவிக்காதிருந்தனர். அவர்கள் உணவுக்காக மாத்திரமே மிருகங்களை வேட்டையாடினர். தேன் சேகரிப்பதற்கு விசேட ஆர்வம் செலுத்தினார்கள். குழந்தைகள் பிறந்தது கற்குகைகளிலோ, காட்டு மரத்தின் அடியிலோ, குடில்களிலோ ஆகும். இறந்தவர்களை வழிபடுதல் அவர்களின் நம்பிக்கையிலே முதலிடத்தை வகிக்கின்றது. தமது சமுதாய குழுக்களில் நடைபெறும் சம்பிரதாயங்களை அழிக்காமல் தொடர்ந்து கொண்டு செல்லக்கூடிய விருப்பத்தைக் காட்டுகின்றனர். சிறிய கூட்டமாக வாழும் இவர்கள் நோய்வாய்ப்பட்டவுடன் மருந்துகளைப் பெற்றுக் கொள்வது தமது சூழலிலிருந்தேயாகும். மரங்களின் இலை, பட்டை, கிழங்கு, வேர் என்பவனவும் மலைப்பாம்பு எண்ணெய் போன்ற விலங்கு எண்ணெயும் மருந்தாகப் பயன்படுத்தப்பட்டன. காலமாற்றத்தோடு வேடுவ சமூகத்திலும் சிற்சில மாற்றங்கள் ஏற்பட்டன. குகைகளை கைவிட்டு வீடுகளை அமைக்கப் பழகிக் கொள்வதுடன் அதற்கு தேவையானவற்றை தாம் வாழும் சூழலிலிருந்து பெற்றுக் கொண்டனர். இது மட்டுமன்றி தமது புராதன கலாசாரப் பண்புகளையும் மாற்றிக் கொள்ள முற்பட்டனர்.



உரு 11.1 ஆதிவாசிகளின் கற்குகை



பிவிருபொல்லே பெத்தேயில்இஉள்ள வேடுவத் தலைவன்

## புரதான வாழ்க்கைக் கோலத்திலிருந்து மாற்றமடைவதில் செல்வாக்குச் செலுத்திய காரணங்கள்.

1. அபிவிருத்தி திட்ட முறைகளின் பரவல்

   மகாவலி அபிவிருத்தி திட்டம் நடைமுறைபடுத்தப்பட்ட பின்னர் கந்தகம் வெல, கரகொட, கொட்டயாய ஆகிய கிராமங்கள் மாதுறு ஓயா தேசிய புகலரணுக்கு உரித்தாகியதால் அக்கிராமங்களைக் கைவிட்டு புதிய குடியேற்றங்களில் வாழ்வதற்குச் சென்றார்கள். கல்லோயாத்திட்டம் காரணமாக இங்கினியாகல பிரதேசத்திலிருந்து வேடர்கள் சிங்கள கிராமங்களிலுள்ள மக்களோடு தொடர்பு கொண்டதால் கலாசார மாற்றங்களுக்கு உட்பட்டனர்.

2. இன்றைய வேடர் சமூகத்தில் பிள்ளைகள் பழைய வாழ்க்கை முறையை மாற்றியமைப்பதற்கு விருப்பம் தெரிவிக்கின்றமை.

3. உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுடன் அடிக்கடி தொடர்புகளை வைத்துக்கொள்ள வேண்டி ஏற்பட்டமை.

4. சிங்கள, தமிழ் மக்கள் வேடர்கள் இருக்கும் பிரதேசங்களுக்கு அருகில் வாழ்வதால் அவர்களின் பழக்க வழக்கங்களைப் பெற்றுக் கொள்கின்றமை.

5. பல்நோக்கு அபிவிருத்தி திட்டங்கள் செயற்படுத்தப்படுவதால் காடுகள் குறைகின்றமை.

6. வேடர்களின் பிள்ளைகள் முறைசார் கல்வியைப் பெற்றுக் கொள்கின்றமை.

இலங்கையின் ஆதிவாசிகள் அபிவிருத்தி நடவடிக்கைகளினால் ஏற்பட்ட சமூக, பொருளாதார வேறுபாடுகளின் தாக்கங்களுக்கும் உட்பட வேண்டியேற்பட்டுள்ளது. அதனால் அவர்களின் புராதன சமூக பழக்கவழக்கங்கள் நடைமுறைகள் என்பன மாறுபாடடைந்து கலப்பு கலாசாரமாக மாறியுள்ளதைக் காணலாம்.

அவர்கள் சிங்கள, தமிழ் மக்கள் பிரிவினர்களுடன் கலப்புத் திருமண சம்பந்தங்களை மேற்கொள்ள ஆரம்பித்துள்ளார்கள். அவர்கள் கற்குகைகளில் வாழ்வதை விட்டுவிட்டு களிமண், தடிகளால் கட்டப்பட்ட வீடுகளில் நிரந்தரமாக வாழப் பழகிக் கொண்டனர். வேட்டையின் மூலம் உணவைப் பெற்றுக் கொள்ளும் முறை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. காட்டு மிருகங்கள் அழிவடைதல், அபிவிருத்தி நடவடிக்கைகள் காரணமாக சிற்சில சட்டங்களின் செல்வாக்குக்குட்பட வேண்டியிருத்தல் என்பன இதற்குக் காரணமாகும். ஆதிவாசிகளின் வாழிடமான காடுகளின் அளவு குறைவடைவதாலும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாலும் விருப்பத்திற்கிணங்க தமது தேவைகளை நிறைவேற்ற முடியாத குறைபாட்டை நிவர்த்தி செய்ய நகரங்களுக்குச் செல்லப் பழகிக் கொண்டனர். உதாரணமாக மஹியங்கனை போன்ற நகரங்களுக்குச் சென்று ஆடை அணிவகைகளையும் வெங்காயம், மிளகாய் என்பவற்றையும் பெற்றுக் கொள்ளப் பழகிக் கொண்டனர். சுற்றுலாப் பயணிகளின் வருகை காரணமாக ஆதிவாசிகளின் பழக்கவழக்கங்கள், நடத்தைகள் மேலும் மாற்றம் அடைந்துள்ளது.

முற்காலத்தில் உணவு சேகரிப்போராக வாழ்ந்த ஆதிவாசிகள் இன்று உணவு உற்பத்தி செய்வோராக மாறியுள்ளனர். அவர்கள் சேனைப்பயிர்ச்செய்கையைப் பழகிக் கொண்டமையை இதற்கு உதாரணமாகக் கூறலாம். எனினும் அதுவும் வெற்றியளிக்கக் கூடிய வாழ்க்கை முறையாக மாற்றியமைப்பதற்குத் தடைகள் அதிகமாகும். ஆதிவாசிகளின் சமூகத்தில் இன்றைய தலைமுறையினர் நவீனமுறைகளை மேற்கொள்ளக்காட்டும் விருப்பம் அதிகரித்துச் செல்வதால் அவர்களில் முதியோருக்கும் இளைஞர் பரம்பரைக்கும் இடையில் கருத்து வேறுபாடுகள் ஏற்படுவதுண்டு. எனினும் இளைஞர் பரம்பரை அவர்களது பழைய பழக்கவழக்கங்கள், சம்பிரதாயங்களை கைவிட்டு நவீன சமூகமுறைமைக்கு அதிக ஆர்வம் காட்டுகிறார்கள். அதனால் அவர்கள் கல்வியைப் பெற்றுப் பல்வகையான தொழில்களில் ஈடுபடுள்ளனர்.

## சவால்கள்

- ❑ ஆதிவாசிகளின் பழங்காலப் பழக்கவழக்கங்களை ஏற்றுக்கொண்டு அவர்களின் வாழ்க்கை முறைகளை மேலும் முன்னெடுத்து செல்வதற்கு இருக்கும் தடைகள்.
  உ-ம் : அபிவிருத்தி செயற்பாடுகளும், திட்டமிடலும் காரணமாக அவர்களுக்கு விரும்பியவாறு வாழ்வதற்கு பொருத்தமான பிரதேசங்கள் இல்லாமை.
- ❑ ஆதிவாசிகளில் இனறைய இளைஞர் பரம்பரையில் அதிகமானோர் வேறுபடும் நவீன சமுதாயத்தினை ஏற்க விருப்பமாயிருத்தல்.
- ❑ ஆதிவாசிகளின் சமுதாயத்தில் முதியோருக்கும் இன்றைய இளைஞர் சமுதாயத்திற்கும் இடையேயுள்ள கருத்துக்களும், பழக்கவழக்கங்களும் வேறுபடுகின்றன.
- ❑ ஆதிவாசிகளின் பரம்பரையினர் சிங்கள தமிழ் மக்களோடு கலப்புத் திருமணத்தில் ஈடுபடுவதால் அவர்களின் பழக்க வழக்கங்கள் மாற்றமடைகின்றன.

இவ்வாறான சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளதால் எதிர்காலத்தில் ஆதிவாசி மக்கள் சமூகத்தின் பண்புகளும் நடவடிக்கை முறைகளும் அருங்காட்சியகத்தில் கற்ற வேண்டிய நிலைக்கு மாறக்கூடிய சந்தர்ப்பம் அதிகமுண்டு.

**செயற்பாடு 2**

- ◆ இலங்கையின் ஆதிவாசிகள் அவர்கள் வாழ்ந்த சூழலுக்கு அதிக முக்கியத்துவம் காட்டியதை அறிந்து கொள்ளக்கூடிய காரணிகளை உதாரணங்களுடன் முன்வைக்க.
- ◆ சூழலைப் பேணிப்பாதுகாப்பதற்காக ஆதிவாசிகள் மூலம் நாங்கள் பெற்றுக் கொள்ளக் கூடிய முன்மாதிரிகள் யாவை?
- ◆ இலங்கையில் ஆதிவாசிகள் ஏனைய மக்களுடன் தொடர்புகொள்ளக்கூடிய சந்தர்ப்பங்கள் யாவை?



உரு 11.3 வேடர் சமூகத்தின் சமய நடனம்



உரு 11.4 வேடர் சமூகத்தின் அதிவிருப்பமான உணவான தேனும் தேன் வதையும்